DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. - 151/2024

Prosecution PW -16

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. பன்னீர் செல்வம் | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 06.02.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused 1 to 10 Present.

முதல் விசாரணை

நான் பசுபதிகோவிலில் குடியிருந்து மளிகை கடையில் வேலை செய்துவருகிறேன். சாட்சி முத்து குமாரவேலை தெரியும். 01.04.2024ம்தேதி மாலை 7-7.30 மணியளவில் என் அண்ணின் மளிகை கடைக்கு வந்தேன். பசுபதிகோவில் மெயின் ரோட்டில் என் அண்ணன் கடைக்கு எதிர்புறம் போலிசார் நின்றுகொண்டிருந்தார்கள். சண்டை குறித்து தெரியுமா என்று கேட்டார்கள் தெரியாது என்று சொன்னேன். காட்டப்படும் 01.04.2024ம் தேதியிட்ட பார்வை மகசரிலுள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. 02.04.2024ம் தேதியிட்ட கைபற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலிசார் விசாரணையில்,01.04.2024ம் தேதி மாலை 5 மணிக்கு பசுபதிகோவிலை சேர்ந்த செந்தில்குமார் மற்றும் அவரது உறவினர்கள் மற்றும் அவரது நண்பர்களை 1வது எதிரி அழகேசன் மற்றும் அவரது உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அடித்து காயப்படுத்தியதாகவும் அதில் ஜெயகுமார்இறந்துபோனதாகவும் அந்த சம்பவ இடத்டித என் முன்பாகவும் முத்துகுமாரவேல் முன்பாகவும் போலிசார் பார்வையிட்டு பார்வை மகசர்மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதில் நான் சாட்சியாக கையெழுத்துபோட்டேன் என்றும் பின்னர் இரவு 12.30 மணிக்கு எங்கள் முன்னிலையில் சாதாரண மண் சிறிதளவும், ரத்தம் தோய்ந்த மண் சிறிதளவும் பாலிதின் கவரில் எடுத்தார்கள் என்றும் சம்பவ இடத்தில் நின்ற TN 36 AZ 0660 என்ற பதிவுஎண் கொண்ட வெள்ளை நிற காரையும் TN 68 U 0730 என்ற பதிவு எண் கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தையும் உடைந்த கண்ணாடி துகள்கள் சிறிதளவையும் மகசரில் கைபற்றினார்கள் என்றும்

அதிலும் நான் சாட்சியாக கையொப்பம போட்டுவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

இல்லை

ஒம்/ஜி.சுந்தரராஜன்

அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. - 151/2024

Prosecution PW - 17

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. தினேஷ் | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 06.02.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused 1 to 10 Present.

முதல் விசாரணை

நான் கீழகொருக்கப்பட்டில் குடியிருந்து பினான்ஸ் கலெக்சன் வேலை செய்துவருகிறேன். சாட்சி மோகன்ராஜ் தெரியும். 1 வது எதிரி அழகேசனை தெரியும். 02.04.2024 ம் தேதி பாபநாசத்தில் சொந்த வேலையாக நானும் மோகன்ராஜ்ம் சென்றோம். அப்போது போலிசாரை பார்த்து அழகேசன், கார்த்திக் மற்றும் மூன்று நபர்கள் ஓடினார்கள். அவர்களை போலிசார் சூலமங்கலம் பைபாசில் பிடித்து அவர்களை விசாரித்தார்கள். அழகேசன் என்பவர் நாங்க தான் கட்டையால் ஜெயகுமாரையும் செந்தில் ஆகியோர்களை தாக்கியதாகவும், ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்தார்கள். பின்னர் 1 வது எதிரி அழகேசன் மற்றும் அவருடன் வந்த நான்கு நபர்களையும் என்னையும் மோகன்ராஜ் மற்றும் போலிசாரை அழைத்துகொண்டு பசுபதி கோவிலில் உள்ள ஒரு தென்னந்தோப்பில் 5 மூங்கில் கம்பு, வெள்ளை சட்டை, ஊதா கைலி, ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். அதைபோலிசார் வாங்கி வைத்துகொண்டு சாட்சியாக என்னிடமும் மோகன்ராஜ்ம் கையெழுத்து வாங்கினார்கள். காட்டப்படும் 1 வது எதிரி அழகேசன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். ஒப்புதல் வாக்குமூலம்அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ **5**. கைபற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். கைபற்றுதல் மகசர் அதசாஆ **6**. 1 வது எதிரி எடுத்து ஆஜர் செய்த பொருட்களை பார்த்தால் அடையாளம் காட்டுவேன். நீதிமன்றத்திலுள்ள மூங்கில் கம்பை போல் தான் இருந்தது. (மற்ற சான்றுபொருட்களை அடையாளம் காண்பிக்கும்பொருட்டு முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/ஜி.சுந்தரராஜன்

அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்